
# நடைபாதையில் இடையூறு - சாக்கடைகளில் குப்பைகள்

# 35 சம்மன்கள் வெளியீடு





கோலாலம்பூர், மே 12-

கடந்த புதன்கிழமை லோராங் ஹாஜி தாயிப் , ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மான் ஆகிய பகுதிகளில் உள்ள உணவுக் கடைகளுக்கு 35 அபராத சம்மன்கள் வெளியிடப்பட்டதாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் கூறியது.

தூய்மை உள்ளிட்ட பல்வேறு குற்றங்களுக்காக இந்தச் சம்மன்கள் வெளியிடப்பட்டன. பொது இடத்தில் அனுமதியின்றி வியாபாரப் பொருட்களை வைத்தது, பொது இடங்களில் குப்பைகளை வீசியது, சாக்கடைக்குள் குப்பைகளை போட்டது, சாக்கடையில் நீரோட்டத்தைத் தடுக்கும் வகையில் பொருட்களை போட்டதற்காக இந்தச் சம்மன்கள் வெளியிடப்பட்டன என்று கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின அறிக்கை கூறியது.

கடைகளுக்கு முன்புறமும் பின்புறமும் நடைபாதையில் இடையூறை ஏற்படுத்திய வியாபாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. தலைநகரில் உள்ள வியாபாரிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதுதான் இந்த நடவடிக்கையின் நோக்கம். வர்த்தகப் பகுதிகளில் தூய்மைப் பேணிக்காக்க வியாபாரிகளும் அதிகாரிகள் தரப்புடன் ஒத்துழைக்க வேண்டும் என்று மாநகர் மன்றம் வலியுறுத்தியது.